# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2022 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

[2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. 25/ 2021

### (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*131 ஆம் அத்தியாயத்தின் 31ஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31ஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்தப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) நியாயசபையொன்றின் ஏதேனும் கட்டளைக்கெதிராக வேலையாள் ஒருவரினால் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒன்றின் மீது அத்தகைய வேலையாளுக்குச் சார்பாக அரசியலமைப்பின் 154ஞ எனும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் இறுதிக் கட்டளை யொன்றுடன் திருப்தியுறாத தொழில்தருநரொருவர் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன் றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டின் விடயமாகவுள்ள கட்டளையானது-

(அ) வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையின் செலுத்துகையை மாத்திரம் பணிக்கின்றவிடத்து;

(ஆ) வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையின் செலுத்துகையையும் அத்தகைய வேலையாளை பணி

யில் மீளவமர்த்துலையும் அத்துடன் அவரது சேவைகள் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் அத்தகைய வேலையாளின் மாதச் சம்பளத்தின் அல்லது வேதனத்தின் பன்னிரெண்டு மடங்குகளின் செலுத்துகையையும் பணிக்கின்றவிடத்து,

அவர், பணத்திலான பிணைப்பொறுப்பொன்றை அத்தகைய நியாயசபையின் தலைவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(1ஆ) உட்பிரிவு (1அ) இன்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒவ்வொன்றும், (1அ) எனும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று தொழில்தருநரினால் உரிய முறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட நியாயசபையின் தலைவரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(1இ) நியாயசபை ஒவ்வொன்றினதும் தலைவர், (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்தல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 31ஈஈஈஈஈ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈஈஈஈஈ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*“மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான ஒரு விண்ணப்பம் தொடர்பில் தொழில்தருநர் பிணைப் பொறுப்பு ஒன்றைக் கொடுத்து தவுதல்*

31ஈஈஈஈஈ. (1) பிரிவு 17(1) இன்கீழ் நடுத்தீர்ப்பாளர் ஒருவரினால் அல்லது 24 ஆம் பிரிவின்கீழ் கைத்தொழில் நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட அளிப்பொன்றுக்கெதிராக ஓர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்று தொழில்தருநர் ஒருவரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய

விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள அத்தகைய அளிப்பானது வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றிலான பணத்தொகையைச் செலுத்தும்படி பணிக்கின்ற விடத்து, தொழில்தருநரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பணத்திலான பிணைப் பொறுப்பொன்று கொடுத்துதவப்படுவதன் மேல் அத்தகைய விண்ணப்பத்தை ஏற்றுக்கவனித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான தொகையை இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக் கப்பட்ட வங்கியில் அவரினால் பேணப்படும் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்தல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப் பம் ஒவ்வொன்றும், (1) ஆம் உட்பிரிவில் குறித்து ரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று அத்தகைய தொழில்தருநரினால் உரியமுறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"மேல் நீதிமன்றத்துக்கான ஒரு விண்ணப்பம் தொடர்பில் தொழில்தருநர் பிணைப் பொறுப்பு ஒன்றைக் கொடுத்துதவுதல்*

33அ. (1) வேலையாள் ஒருவருக்குச் சார்பாக ஆக்கப்பட்டுள்ள நியாயசபையின் கட்டளை யொன்றுக்கு, கைத்தொழில் நீதிமன்றமொன்றின் அல்லது நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் அளிப் பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றமை காரணமாக தொழில்தருநரொருவருக்கு எதிராக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல்

நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 136ஆ என்னும் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறைப்பாட்டின் மீதான நீதிவான் நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றுடன் திருப்தியுறாத அத்தகைய தொழில்தருநரொருவர், அத்தகைய கட்டளை தொடர்பில் அரசியலமைப்பின் 154ஔ எனும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் மீளாய்வுசார் நியாயாதிக்கத்தை வேண்டி விண்ணப்பமொன்றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பத்தின் போது, அத்தகைய விண்ணப்பத்தின் விடயமாகவுள்ள கட்டளையானது வேலையாளுக்கு பணத்தொகை ஒன்றைச் செலுத்தும்படி பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையில் பணத்திலான பிணைப் பொறுப்பொன்றை இயைபான நீதிவான் நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் ஆணையாளர் தலைமையதிபதியினால் பேணப்படும் வட்டியை ஈட்டுகின்ற கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பச் செய்தல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பிணைப்பொறுப்பொன்று அத்தகைய தொழில்தருநரினால் உரியமுறையில் கொடுத்துதவப்பட்டுள்ளதெனப் பொருள்பட இயைபான நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளரின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

*(4) ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்துக் கேற்ப, 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக் கப்பட்ட மேல்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறை யீட்டு நீதிமன்றத்தின் இறுதிக் கட்டளைக்கு இணங்கி யொழுகி, அப்பணத்தொகைமீதான வட்டியுடன் சேர்த்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப் பட்ட பணத்தொகையை இயைபான திறத்தவருக்கு மீளளித்தல் வேண்டும்.".*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*